[திரு. மு. அப்பாவு] [2009 பிப்ரவரி 26

நிதியிலாவது இந்த ஆண்டே அந்த அணையைக் கட்டி அந்த 8 குளங்களும் பாசனத்திற்கு நீர் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று சொல்லி நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பலமுறை இந்தக் கோரிக்கையை என்னிடத்திலே நேரிலே தெரிவித்திருக்கிறார்கள். அவருடைய கோரிக்கை அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுக் காலம் கடந்தோடி விட்டது. அந்தப் பகுதி மக்கள், விவசாயிகள் எல்லாம் மிக வேதனையோடு இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே கட்டி முடிக்கப்படும் என்று சொல்லி, எங்களுக்கு ஒரு ஆறுதலான பதிலை இந்த அவையிலே தர வேண்டுமென்று பணிவோடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் தலையை அசைத்து விட்டார், விடுங்கள்.

(ஊ) கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்தின் உரிமையாளர்களுக்கு நீதிமன்றத் தீர்ப்பின்படி உரிய இழப்பீட்டுத் தொகை இதுவரை வழங்கப்படாதது குறித்து, அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் செ.ம. வேலுசாமி, ம.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் ஆகியோர்

2009 பிப்ரவரி 26] [பேரவைத் தலைவர்]

விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். தகவல் கோரல் என்கின்ற முறையில் இதை எடுத்துக்கொள்கின்றேன். இதுகுறித்துச் சுருக்கமாகக் கட்சிக்கு ஒருவர் என்கின்ற முறையில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார் பல்கலைக்கழகம் 1983–ல் மறைந்த மனிதப் புனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் துவக்கப்பட்டது. அன்றைய தினம் 1,200 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு நிலச்சுவான்தாரர்களுக்கு அரசு நிலவரப்படி தொகை கொடுத்திருந்தாலும், "சந்தை நிலவரப்படி மீண்டும் எங்களுக்குக் கூடுதலாக நில மதிப்பீடு, முழுக்க, முழுக்க விவசாயத்தை நம்பியிருப்பவர்கள் நாங்கள், எங்களுக்குக் கூடுதல் தொகை வேண்டும்" என்று 19 வழக்குகள், சுமார் 600 பேருக்குமேல் வழக்குத் தொடர்ந்து, ஓராண்டுக்கு முன்னரேயே கூடுதல் தொகை வழங்க வேண்டுமென்று தீர்ப்புக் கொடுத்த பின்னரும்கூட, இந்த அரசு விவசாயிகளுக்கு நேசக் கரம் கொடுக்கிறது என்று கூறிக்கொள்கிற அரசு, இன்னும் கொடுக்காமல் கால தாமதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், மேல்முறையீடு செய்வதற்காக முயற்சி செய்வதாக அறிகிறோம். ஆதலால், அங்கே இருக்கின்ற விவசாயிகள் இன்றுகூட காலை 10 மணியிலிருந்து மறியல், ஆர்ப்பாட்டம் என்று வாழ்வாதாரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற நிலையில், அரசு அதில் கவனம் செலுத்தி உடனடியாக நிவாரணத்தை வழங்க வேண்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 12–05

மேலும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவாதப்படி, வாரிசுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில், 30 சதவீதம்தான் இதுவரை கொடுக்கப்பட்டது என்றும், அதுவும் தொகுப்பூதியங்களில் அதிகமாக இருக்கின்றது என்றும், பாரபட்சமாக ஆளும் கட்சிக்குச் சாதகமாக இருப்பவர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர் என்றும் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. சரிசமமாக அங்கு இருப்பவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ.ம. வேலுசாமி] [2009 பிப்ரவரி 26

என்னுடைய தொகுதியில், விசைத் தறியாளர்கள் இரண்டு இலட்சம் பேர் இன்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்புக்கு இரண்டு மாதங்களாகக் கட்டணம் கட்டாமல் போராடிக்கொண்டிருக்கின்றார்கள். நான் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருந்தேன். இதில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தும், இன்னும் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிற நிலையில், 3,000 யூனிட்டுகள் கொடுத்து, உதவிகள் செய்து கொடுத்ததாக, இலவச மின்சாரம் வழங்கியதாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதே வறட்சியான காலத்தில், மூன்று முறை மின்சாரச் சலுகை வழங்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி. நீங்கள் இலவச மின்சாரம் என்று அறிவித்துவிட்டு, அந்த இலவச மின்சாரத்தை முழுக்க விசைத் தறியாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். இரண்டு மாதங்களாகப் போராடிக்கொண்டு, மின் இணைப்புக் கட்டணம் கட்டாமல் போராடிக்கொண்டிருக்கின்ற, வாழ்வாதாரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கின்ற பல்லடம் தொகுதி, கோவை மாவட்ட விசைத் தறியாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக இலவச மின்சாரமும், அதேபோன்று முழுநேர மின்சாரமும் வழங்க வேண்டுமென்று அவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கு முன்பு, அந்தப் பல்கலைக்கழகத்திற்காக சுமார் 1,200 ஏக்கர் நிலத்தை ஐநூறுக்கும் மேற்பட்ட குறு, சிறு விவசாயிகளிடத்திலேயிருந்து அரசாங்கம் கையகப்படுத்தியது. அப்போது மிகக் குறைந்த தொகைதான் இழப்பீடாக வழங்கப்பட்டது. ஆனால், கூடுதலாக இழப்பீடு வழங்க வேண்டுமென்று கேட்டு, அந்த நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திலே கடந்த 30 ஆண்டுக் காலமாக வழக்கு நடத்தி, கடந்த ஆண்டு கூடுதலாக அவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென்று நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. ஓராண்டுக் காலமாகியும், இன்னும் அவர்களுக்கு அந்த இழப்பீடு கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக பாரதியார் பல்கலைக்கழகத் துணை வேந்தரிடம் நான் தொடர்புகொண்டு கேட்டபோது, அரசாங்கம்தான் நிலம் ஆர்ஜிதம் செய்து பல்கலைக்கழகத்திற்குக் கொடுத்திருக்கிறது. ஆகவே, இழப்பீடு வழங்குகின்ற பொறுப்பு அரசாங்கத்திடம் உள்ளது. பல்கலைக்கழகமாக

2009 பிப்ரவரி 26] [திரு. மு. கண்ணப்பன்]

ஒரு முடிவு எடுக்க முடியாது என்ற பதிலைத்தான் சொன்னார்கள். இது சம்பந்தமாக 3 மாத காலத்திற்கு முன்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதி, அவர்களுடைய அலுவலகத்திலிருந்து இதுசம்பந்தமாக மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற பதிலும் எனக்கு வந்திருக்கிறது. இரண்டு தலைமுறை கடந்துவிட்டது. பல பேர் இன்றைக்கு நில உடைமையாளர்கள் உயிரோடு கிடையாது. அவர்களுடைய வாரிசுகள்தான் இருக்கிறார்கள். அவர்களுக்காவது அந்தப் பணம் போய்ச் சேருகின்ற வகையில் விரைவில் இழப்பீடு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாரதியார் பல்கலைக்கழகத்திற்காக நிலம் எடுக்கப்பட்டு அதிலே அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை, அரசாங்கம் அன்றைக்கு நிர்ணயம் செய்த தொகை போதவில்லை என்று அவர்கள் நீதிமன்றத்திலே அந்த இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்று, enhancing compensation தர வேண்டுமென்று நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கின்மீது ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டு, அதற்குப் பின்னால் அரசு, அந்த வழக்கு சம்பந்தமாக தற்சமயம் மேல் முறையீடு செய்திருக்கின்றது. அந்த மேல்முறையீடு தற்சமயம் உயர் நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்றது. அப்படி நிலுவையிலே இருக்கின்ற நேரத்திலே அரசு, ஏற்கெனவே வழங்கியிருக்கின்ற தீர்ப்பின் அடிப்படையிலே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த மேல் முறையீடு வழக்கு இன்றைக்கு நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால், அந்த மேல்முறையீடு வழக்கு முடிந்தவுடனேதான், அந்த இழப்பீடு சம்பந்தமாக அரசு முடிவு செய்யவேண்டிய நிலை இருக்கும். எனக்குக் கொடுத்திருக்கின்ற தகவலின்படி அப்படித்தான் வழங்கியிருக்கின்றார்கள். ஆக, அரசைப் பொறுத்த அளவில் நிலங்களை ஆர்ஜிதம் செய்கின்றபொழுது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதிலே எந்தப் பாரபட்சமும் காட்டுவதில்லை; அனைவருக்கும் தரப்படுகிறது. பல்லாண்டுக் காலமாக

நிலுவையிலிருந்த இழப்பீட்டுத் தொகைகளை எல்லாம், அரசு வழங்கிக்கொண்டிருக்கின்றது. அதிலே எந்தத் தாமதமும் செய்யமாட்டோம். தற்சமயம் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு நிலுவையில் இருக்கின்றது. அதனால்தான் தற்போது வழங்குவதற்கு இயலாத ஒரு நிலை இருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

திரு. மு. கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மாவட்ட நீதிமன்றத்திலேதான் முறையீடு செய்து, மாவட்ட நீதிமன்றம்தான் கூடுதல் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று தீர்ப்பு சொன்னது. ஆனால், உயர் நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்யப்போகிறோம் என்று அரசின் தரப்பிலே துணை வேந்தருக்குப் பதில் சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட முறையீடு செய்வதாக இருந்தால், செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்வதோடு, அப்படியே மேல்முறையீடு செய்திருந்தாலும், அந்த ஏழையெளிய விவசாயிகளுடைய நலன் கருதி, அந்த மேல்முறையீட்டைத் திரும்பப் பெற்று அவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதுவும் ம.தி.மு.க.–வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அண்ணன் கண்ணப்பன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எனக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்திருக்கின்ற தகவல், மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது என்றுதான் கொடுத்திருக்கின்றார். அதுசம்பந்தமாக நான் முதல்வரிடத்திலே கலந்து பேசி நடவடிக்கை எடுக்கிறேன். மேல்முறையீடு சம்பந்தமாக எவ்வளவு enhancing compensation கேட்டிருக்கிறார்கள் என்ற முழு விவரம் எனக்குத் தரப்படவில்லை. அதை அறிந்து, அரசு அது குறித்துப் பேசி, வருகின்ற காலத்திலே அதைப் பரிசீலிக்கும்.